Pastoral Letter No/GR/40/2019

# ஆயா் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

கத்தோலிக்க திருச்சபையானது, செப்டம்பா் மாதம் புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் அருளாளா் பிரடரிக் ஓசானாம் ஆகியோாின் திருநாட்களை கொண்டாடி வருகிறது. இத்தருணத்தில் பிறரன்புப் பணிபுரியும் உங்கள் அனைவருக்கும் புனித வின்சென்ட் தே பவுல் திருநாள் நல் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

1581-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் பிறந்து தனது 19-ஆவது வயதிலே குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டு, 1660-ம் ஆண்டு செப்டம்பா் 27-ம் நாள், தனது 80 வயதுவரை ஏழைகளுக்காகவே வாழ்ந்து, ஏழைகளின் பாதுகாவலராக இன்றும் போற்றப்படுபவரே புனித வின்சென்ட் தே பவுல். “துயறுரும் ஏழைகளுக்கு உதவுவதே தனது குருத்துவ வாழ்வின் குறிக்கோள்” என உறுதி எடுத்து, இளைஞா்கள் பலரை ஒருங்கிணைத்து அனாதைகளையும் ஆதரவற்றோரையும் பராமரிக்க பல எண்ணற்ற இல்லங்களை ஏற்படுத்தி இறைப்பணி செய்து வந்தாா். இவரது பெயரில் தொடங்கப்பட்ட பொது நிலையினரை உறுப்பினா்களாகக் கொண்டு இன்றளவும் நன்முறையில் செயல்பட்டுவரும் ஒரு சபையே புனித வின்சென்ட் தே பவுல் சபை.

இச்சபையை தோற்றுவித்தவா் பிரடரிக் ஓசானாம் என்னும் 20 வயது சட்டக்கல்லூரி இளைஞா். இவா் 1813 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 23 ஆம் நாள் இத்தாலியிலுள்ள மிலான் நகரில் பிறந்தாா். இவா் விவிலியம், திருச்சபை ஆகியவற்றின் ஒன்றுபட்ட செயல்பாட்டில் நம்பிக்கைக் கொண்ட ஒரு கத்தோலிக்கராக விளங்கினாா். அவா் இளைஞா்களிடம் பேசும் போது “இப்பூமி மனித நேயமற்ற இடமாக உள்ளது. மனித நேயமென்னும் தீச்சுவாலையை மீண்டும் சுடா்விடச் செய்வதே கத்தோலிக்கராகிய நமது கடமையாகும்” எனக் கூறுவாா். இவ்வாறு ஏழைகள் மீதும் திருச்சபை மீதும் மிகுந்த பற்று கொண்டு வாழ்ந்த இளைஞரான அவா் தமது பிறந்தநாளில் அதாவது 1833 ஏப்ரல் 23-ம் தேதி அன்று 19 முதல் 23 வயதுடைய ஐந்து மாணவா்களை இணைத்து இம்மானுவேல் பெய்லி என்பவருடைய தலைமையில் 7

உறுப்பினர்களைக் கொண்டு புனித வின்சென்ட் தே பவுல் சபையின் முதல் கிளைச்சபையைத் தொடங்கினார். இன்று 139 நாடுகளில் சுமார் 25000-க்கும் மேற்பட்ட கிளைச்சபைகளுடன் மூன்று லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் இச்சபையில் செயல்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

நமது மறைமாவட்டத்திலும் 8.12.1963 இல் அமரர் அருட்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குந்நேல் அடிகளாரால் சூசைபுரம் புனித சூசையப்பர் கிளைச்சபை தொடங்கப்பட்டது. 12.12.1997 முதல் தக்கலை மத்தியப் பேரவை உருவெடுத்து நமது மறைமாவட்ட இறைப்பணிகளில் வின்சென்ட் தே பவுல் சபை ஈடுபடுவதோடு, பிறரன்பு பணிகளின் மகுடமாகத் திகழ்கிறது. இத்தருணத்தில் வின்செந்தியர்களால் நடத்தப்படும் ஓசானாம் உயர்கல்வி நிலையச் செயல்பாடுகள், பேரிடர் உதவி, தத்துக் குடும்பங்களுக்குச் செய்யும் உதவி, அரசு மருத்துவமனை தூய்மை செய்யும் நிகழ்வு, “காருண்யா நிதி” மற்றும் அதன் செயல்பாடுகள், கல்வி நிதி உதவிகள், திருமண மற்றும் மருத்துவ உதவிகள் போன்ற செயல்பாடுகளுக்கு மறைமாவட்டம் சார்பாக பாராட்டுக்களையும் தெரிவிக்கிறேன்.

அறப்பணியும் ஆன்மீகமும் மனிதனின் இருகண்கள் போன்றது. இவை இரண்டையும் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரித்துப் பார்க்க இயலாது. அவ்வாறு ஒன்று பிரிந்து செயல்பட்டால் அச்செயல் முழுமை நிலையை அடையாது. எனவே, வின்செந்தியர்கள் ஆன்மீகத்தைத் தவிர்த்து அறப்பணி மட்டும் ஆற்றுவதை கைவிட வேண்டும். நமது அறப்பணிகளில் ஆன்மீகமும் கலந்து இருக்க வேண்டும். அதுபோல அருட்தந்தையர்களை உங்கள் கிளைச்சபைக் கூட்டங்களுக்கு மாதமொருமுறையாவது அழைத்து அவரது ஆலோசனை பெற்று செயல்பட்டால் இன்னும் உங்கள் செயல்பாடு ஊக்கம் பெறும். பங்கின் ஒருங்கிணைந்த வளர்ச்சியே திருச்சபையின் வளர்ச்சி. உங்களது அறப்பணியானது எந்தவிதத்திலும் பங்கின் வளர்ச்சிக்கு பங்கம் விளைவிக்கா வண்ணம் அமைய வேண்டும். ஆக, திருச்சபையின் உறுப்பினர் என்ற வகையில் திருச்சபையின் வளர்ச்சியில் பங்கெடுப்போம் என உறுதிகொள்வோம். இவ்வேளையில் குறிப்பாக பிறரன்புப் பணியாற்றும் புனித வின்சென்ட் தே பவுல் சபையில் பணியாற்ற ஏராளமான இளைஞர்கள் முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்..

விமர்சனங்களாலும் விரக்தியாலும் நம் சபையை விட்டுச் செல்கின்ற பலரை இன்று நாம் பரவலாகக் காண்கிறோம். தொழுநோயாளிகளுக்காகவே வாழ்ந்து தொழுநோயாளியாகவே இறந்த அருட்தந்தை டாமியான், ஏழைகளுக்காகவே சொந்த நாட்டை இழந்து இந்தியாவில் வாழ்ந்து இறந்த புனித அன்னை தெரசா, சமூகப்பணிக்காக தனது வாழ்வை இழந்த அருளாளர் இராணி மரியா போன்றவர்களின் வாழ்வு நம்மை உணர்த்துவது விமர்சனங்களையும் விரக்தியையும் களைந்துவிட்டு இறைவனுக்காகப் பணியாற்ற வேண்டும் என்பதே. சுயநலத்தை துறந்து பிறர் நலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால், நாம் அனைவரும் இறைமகன் ஈசோ சுட்டிக்காட்டிய

விண்ணக வீட்டிற்கு உரிமையாளர்களாவோம். “நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள். என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்” (யோவா 14:2) என்ற இறைமகனின் வாக்குறுதி நம் வழியாக நிறைவேற நமது பிறரன்புப் பணிகள் மூலமாக நாம் தகுதியுள்ளவர்களாக மாறுவோம். அதோடு, மறைமாவட்டத்தோடும் மறைமாவட்ட இறைப்பணிகளோடும் நாம் ஒத்துழைப்போம். குறிப்பாக, மறைமாவட்டத்தின் புதிய மறைத்தளங்கள் உருவாக்கும் முயற்சி, நோய் தணிப்பு அலகு (Palliative Care Unit) ஆகிய மறைத்தொண்டு பணிகளில் இணைந்து செயல்பட வின்செந்தியர்களும் முன்வரவேண்டும்.

செப்டம்பர் மாதம் 27-இல் புனித வின்சென்ட் தே பவுல் சபையானது தனது பாதுகாவலரின் திருவிழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் அத்தோடு இணைந்து வரும் ஞாயிற்றுக்கிழமை 29-ம் தேதி அவ்விழாவை கிளைச்சபைகள் பங்குத்தந்தையரோடு ஆலோசித்து சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். வின்செந்திய உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புரவு அருட்சாதனம் பெற்று, திருப்பலியில் பங்குகொண்டு நற்கருணை பெற்றுக் கொள்வதோடு, ஏழைகளுக்கு நல உதவிகள் செய்து அந்த நாளை சிறப்புற செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அன்றைய தினம் பங்கில் எடுக்கப்படும் காணிக்கை வின்செந்திய பணிகளுக்காக வழங்கப்படுவது வழக்கம். எனவே பங்குமக்கள் மனமுவந்து காணிக்கையிட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறே அக்டோபர் 2-ம் நாள் ‘தேசத்தோடு ஒருநாள்’ எனும் சிந்தனையுடன் நடத்தப்படும் துப்புரவு முகாமிலும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

ஆயர் இல்லம்

18.09.2019

என்றும் ஈசோ மெசியாவில்

✠ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

*குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 22.09.2019 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.*